**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்புவனம்**

| 2022-ம் ஆண்டு ஜூன் மாதம் 13-ம் நாள் செவ்வாய்கிழமை வாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1869ம் ஆண்டு சட்ட எண் 44வது பிரிவு 6(1)ன் பிரிவின்படி இளநிலை உதவியாளர் திரு.சிவா என்பவரால் உறுதி பிரமாணம் செய்யப்படுகிறது. | | | |
|---|---|---|---|
| பெயர்: | மாசாணம் | தொழில் : | |
| த.பெ: | மாயாண்டி | சமயம் : | |
| கிராமம்: | | சாதி : | |
| வட்டம்: | | வயது: | |

**13.6.2023 OS No. 109 /2019 வா.சா.1**மாசாணம்**ஆஜர்**

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை:**

1. தாவா வழக்கு என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் என்னுடைய சொத்து என்று பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். எத்தனை சொத்திற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் 2 சொத்திற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். வழக்கு சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் தற்போது எனக்கு ஞாபகம் இல்லை. ஒவ்வொரு சொத்திற்கும் எவ்வளவு விஸ்தீரணம் என்றால் ஒரு சொத்து 35 சென்ட் ஆகும், மற்றொரு சொத்து 44 சென்ட், மற்றொன்று 47 சென்ட் ஆகும்.

2. தாவா சொத்துக்களுக்கு வழக்கு தாக்கல் செய்யும்போது தனிதனியாக நான்குமால் சொல்லியுள்ளேனா என்றால் தனிதனியாக சொல்லவில்லை. மொத்தமாகதான் சொல்லியுள்ளேன். மொத்தமாக சொல்லியுள்ள நான்குமால் தெரியுமா என்றால் தெற்கே பால்சாமி, மேற்கே வண்டிப்பாதை, கிழக்கே இருளப்பன் சேர்வை, வடக்கே பால்சாமி இடமாகும். தாவா வழக்கு தாக்கல் செய்வதற்கு விபரங்கள் யார் சொன்னது என்றால் நான்தான் சொன்னேன்.

3. வழக்கு தாக்கல் செய்யும்பொழுது நான் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் மட்டும்தான் ஆரம்பத்தில் கேட்டிருந்தேன் என்றால் சரிதான். பின்பு நான் வழக்கு திருத்தம் செய்யும்பொழுது எத்தனை சொத்திற்கு விளம்புகை பரிகாரம் கேட்டேன் என்பது தெரியுமா என்றால் 3 சொத்திற்குமே கேட்டிருந்தேன். எந்த சொத்திற்கு சுவாதீன பரிகாரம் கேட்டேன் என்பது தெரியுமா என்றால் 8 நம்பர்(உட்பிரிவு) சொத்திற்கு கேட்டேன். எந்த சர்வே எண்ணிற்கு சுவாதீன பரிகாரம் கேட்டுள்ளேன் என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் தெரியும். எந்த சொத்திற்கு சுவாதீன பரிகாரம் கேட்டுள்ளேன் என்று புலஎண் குறிப்பிடமுடியுமா என்றால் புல எண் ஞாபகம் இல்லை.

4. நான் சுவாதீன பரிகாரம் கேட்டுள்ள சொத்தைப்பொறுத்து விளம்புகை பரிகாரம் கேட்கவில்லை என்றால் சரியல்ல. நான் கேட்டுள்ள விளம்புகை பரிகாரம் மொத்த சொத்திற்கு கேட்டுள்ளேனா, ஆக்கிரமிப்பு பகுதிக்கு மட்டும் கேட்டுள்ளேனா என்றால் 3 சொத்திற்கும் கேட்டுள்ளேன். வழக்கு சொத்துக்கள் எல்லாம் எனக்கு எப்படி

பாத்தியப்பட்டது என்றால் நான் கிரையம் வாங்கியது ஆகும். எந்த தேதியில் எந்த சொத்தை கிரையம் வாங்கினேன் என்றால் தேதி எல்லாம் மறந்துவிட்டேன். ஆனால் சொத்தை நான் கிரையம் வாங்கியுள்ளேன்.

5. எத்தனை வருடத்திற்கு முன்பு கிரையம் வாங்கினேன் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் 20-30 வருடங்கள் இருக்கும். நான் தாக்கல் செய்துள்ள நிருபண வாக்குமூலத்தின் விபரம் யார் சொன்னது என்றால் நான்தான் சொன்னேன். நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.1 ஆவணத்தின் அசல் எங்கு உள்ளது என்றால் வங்கியில் அடமானத்தில் உள்ளது. வா.சா.ஆ.1 ஆவணத்தின் அசல் வங்கியில் அடமானத்தில் உள்ளது என்ற விபரத்தை பிராதிலோ, முதல் விசாரணையின் வாக்குமூலத்திலோ சொல்லவில்லை என்றால் சரிதான்.

6. வா.சா.ஆ.1 ஆவணத்தில் சொல்லியுள்ள சர்வே எண், நான்குமால் தெரியுமா என்றால் வடக்கே என் சொத்து உள்ளது. கிழக்கே இருளப்பன் சொத்து உள்ளது. தெற்கே பால்சாமி இடமும், மேற்கே வண்டிப்பாதை உள்ளது. வா.சா.ஆ.1 ஆவணத்தில் கண்ட சொத்து விபர நான்குமாலுக்கு முரண்பாடாக நான்குமால் விபரம் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. சரியாகதான் நான்குமால் சொல்லியுள்ளேன். வா.சா.ஆ.2 ஆவணம் எந்த சொத்திற்குரிய ஆவணம் என்றால் ஜெயராமனிடம் வாங்கிய சொத்தாகும். அது ஜெயராமனுக்கு நான் விற்று அதன் பிறகு நான் ஜெயராமனிடம் வாங்கிய பத்திரம் என்றால் சரிதான்.

7. ஜெயராமனிடம் நான் விற்ற சொத்திற்கான ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யலாமா என்றால் தாக்கல் செய்யவில்லை. தேவைப்பட்டால் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். ஜெயராமனிடம் விற்று பிறகு வாங்கிய விபரத்தை பிராதிலும், நிருபண வாக்கு மூலத்திலும் சொல்லவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.3 ஆவணம் எந்த சர்வே எண்ணிற்குரிய ஆவணம் என்றால் புல எண்.9க்குரிய ஆவணம் ஆகும். வா.சா.ஆ.3 ஆவணம் என்ன ஆவணம் என்று தெரியுமா என்றால் தெரியாது. அது யாரிடம் இருபந்து எழுதி பெறப்பட்டது என்றால் பாட்டையா மக்கள் அங்குநாதன், கணேசன், பிரபு ஆகியோர்களால் எழுதிக்கொடுக்கபட்டதாகும்.

8. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.1முதல் வா.சா.ஆ.3 வரையிலான ஆவணங்கள் பற்றிய விபரங்கள் தெரியவில்லை என்றாலும், மேற்படி ஆவணங்களில் உள்ள விஷயங்களுக்கு முரண்பாடாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.4 ஆவணம் கணினி பட்டாவில் தாவா சொத்துக்கள் ஒரே பட்டாவில் உள்ளதா என்றால் 3 பட்டாக்களில் உள்ளது. அது எந்த எந்த பட்டா எண்கள் என்றால் பட்டா எண்கள்7,8,9 ஆகும். நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.5 ஆவணமான வரி ரசீது 2017ஆம் ஆண்டுக்குரியது என்றால் சரிதான். இதற்கு முந்தைய காலத்திற்கான

வரிரசீதுகள் தாக்கல் செய்யவில்லை என்றால் வீட்டில் வைத்துள்ளேன். அதை எதற்காக நீதிமன்றத்தில் தாக்கல் செய்யாமல் வீட்டில் வைத்துள்ளேன் என்றால் தேடி எடுக்க முடியவில்லை என்பதால் வீட்டில் இருக்கிறது.

9. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.5 ரசீது எந்த சர்வே எண், எந்த பட்டா எண்ணிற்குரியது என்று தெரியுமா என்றால் தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.5 ரசீது ஒரு பட்டா எண்ணிற்குதான் செலுத்தப்பட்டுள்ளது என்றாலும், மற்ற 2 பட்டா எண்களுக்கு வரி செலுத்தப்படவில்லை என்றாலும் 3 எண்ணிற்குமே வரி செலுத்தியுள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.8 நில வரி ரசீதுகள் தாவா சொத்துக்களுக்கு உரிய பட்டா எண்ணிற்கு செலுத்தபடவில்லை என்றாலும், வேறு பட்டா எண்ணிற்கு செலுத்தப்பட்டுள்ளது என்றாலும் இல்லை.

10. நான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பில் எந்த தேதி முதல் பிரதிவாதிகள் இடையூறு செய்து வருகிறார்கள் என்று தேதி குறிப்பிடவில்லை என்றால் சரிதான். நான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பில் சொத்துக்களின் நான்குமால் விபரங்கள் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். நான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பிய காலத்தில் எனக்கு சொத்துக்களுக்கான நான்குமால் விபரம் தெரியாது என்றால் எனக்கு நான்குமால் தெரியும். நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.7 காவல் துறையில் கொடுத்த புகாரில் எந்த தேதி முதல் பிரதிவாதிகள் இடையூறு செய்து வருகிறார்கள் என்று தேதி குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

11. நான் தாவா வழக்கை 30.1.2018ம் தேதிதான் தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். 27.12.2017ம் தேதி காவல் துறையில் கொடுத்த வா.சா.ஆ.7 புகாரில் மானாமதுரை உரிமையியல் நீதிமன்றத்தில் உரிமையியல் வழக்கு தொடர்ந்துள்ளேன் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். வழக்கே தாக்கல் செய்யாமல் வழக்கு தாக்கல் செய்ததாக பொய்யாக புகாரில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள நிருபண வாக்குமூலத்தில் 28.8.2017ம் தேதி முதல் இடையூறுசெய்ததாக சொல்லியிருப்பது சம்மந்தமாக ஆவணம் என்னிடம் இல்லை என்றால் வீட்டில் வைத்துள்ளேன். மேற்படி ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக உள்ளேனா என்றால் தயாராக உள்ளேன்.

12. நான் தாக்கல் செய்துள்ள நிருபண வாக்குமூலத்தில் 28.8.2017ம் தேதி முதல் இடையூறுசெய்ததாக சொல்லியிருப்பதில் எத்தனை மாதம் கழித்து நான் வழக்கறிஞர் நோட்டீஸ் கொடுத்தேன் என்றால் 1மாதம் கழித்து வழக்கறிஞர் நோட்டீஸ் கொடுத்தேன். வா.சா.ஆ.6 ஆவணமான வழக்கறிஞர் நோட்டிஸில் என்னுடைய இடத்தில் பிரதிவாதிகள் வீடு கட்டியிருப்பதை சொல்லவில்லை என்றால் நீதிமன்ற ஆணையர் பார்வையிட்ட பின்புதான் பிரதிவாதி வீடு கட்டிய விபரம் எனக்கு தெரியவந்தது. நீதிமன்ற

ஆணையர் பார்வையிட்ட பின்புதான் பிரதிவாதி வீடு கட்டியது தெரியவந்தது என்ற விபரத்தை சீர்திருத்த மனு மற்றும் பிராதில் சொல்லவில்லை என்றால் பிற்பாடுதான் தெரியும். பிற்பாடு தெரியவந்ததையும் நான் சீர்திருத்த மனு மற்றும் பிராதில் சொல்லவில்லை என்றால் சரியல்ல.

13. சீர்திருத்த பிராதில் ஆக்கிரமிப்பு விஸ்தீரணம் எவ்வளவு என்று சொல்லியுள்ளேன் என்றால் பிரதிவாதிகள் கிழக்கு மேற்காக 32 அடியும், தென்வடலாக 12 அடியும் ஆக்கிரமிப்பு செய்துள்ளார் என்று சொல்லியுள்ளேன். என் வீட்டிற்கும், பிரதிவாதி வீட்டிற்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் சுமார் 100 அடி தூரம் இருக்கும். என் வீடு எந்த சர்வே எண்ணில் உள்ளது என்றால் எனக்கு தெரியாது. பிரதிவாதிகள் வீடுகள் எந்த சர்வே எண்ணில் உள்ளது என்றால் அது 8ல் உள்ளது. நான் என் வீட்டை கட்டி எத்தனை வருடம் இருக்கும் என்றால் 25 வருடம் இருக்கும். பிரதிவாதிகள் வீடுகள் கட்டியது நான் வீடு கட்டுவதற்கு 5 வருடங்கள் கழித்து கட்டப்பட்டது என்றால் சரிதான்.

14. நான் பிரதிவாதிகள் வீட்டிற்கு அருகில் குடியுள்ளேன் என்றால் சரிதான். அவ்வாறு பிரதிவாதிகள் வீட்டிற்கு அருகில் குடியிருக்கும்போது பிரதிவாதிகள் வீடு கட்டும் சமயத்தில் நான் ஏன் கேட்கவில்லை என்றால் அவர்கள் சொன்னால் கேட்கமாட்டார்கள். அதனால் நான் எந்த பிரச்சனையும் செய்யாமல் இருந்ததால் பிரதிவாதிகள் வீடு கட்டிவிட்டார்கள் என்றால் சர்வேயருக்கு படி கட்டி அளக்க வரும்போதெல்லாம் பிரதிவாதிகளின் தகப்பனாரும், ராமநாதனும் சர்வேயர், வி.ஏ.ஓ வை திருப்பிவிடுவார்கள். அதனால் அளக்க முடியவில்லை.

15. சர்வேயருக்கு படி கட்டியதற்கான ரசீதுகள், விண்ணப்பங்கள் என்னிடம் உள்ளது என்றால் சரிதான். சர்வேயர் அளக்க வருவதற்கு நோட்டீஸ் கொடுத்தாரா என்றால் அளக்கவே விடவில்லை, நோட்டீஸ் எப்படி கொடுப்பார்கள்? பிரதிவாதிகளின் தகப்பனார் வீடு கட்டியுள்ள தாவா சொத்தான பிரதிவாதிகளின் தகப்பனாருக்கு இருளப்பன் சேர்வையிடமிருந்து வெண்ணிலை கிரையம்ஆவணம் மூலம் கிரையம் பெற்றது என்றால் நான் கிரையம் வாங்கியபொழுது அவர் எப்படி கிரையம் வாங்கமுடியும். பிரதிவாதிகள் வீடு கட்டிய நிலத்தின் பெயர் பூலாவடிதார் என்று சொன்னால் சரிதான்.

16. பிரதிவாதிகளின் தகப்பனார் 1980லேயே ஓட்டு வீடும், மாட்டுக்கொட்டமும் கட்டி விட்டார் என்றால் அது புறம்போக்குஇடமாகும். அது புறம்போக்கு இடம் இல்லை என்றாலும் அது தாவா 2ம் லக்க சொத்து என்றாலும் சரியல்ல. ஓட்டு வீடும், மாட்டுக்கொட்டத்திற்கும் கிழக்கே 2 தார்சு வீடுகள் உள்ளது என்றால் நீதிமன்ற ஆணையர் அளந்தபின்புதான் மேற்படி 2 தார்சு வீடுகளும் எங்கள் இடத்திற்குள் இருப்பது தெரியும். எனக்கு வழக்கு தாக்கல் செய்வதற்கு 20 வருடங்களுக்கு முன்பாகவே தாவா

2ம்லக்க சொத்தில் பிரதிவாதிகள் 2 தார்சு வீடுகள் கட்டியுள்ளது தெரியும் என்றால் நீதிமன்ற ஆணையர் அளந்தபின்புதான் அது என் இடத்தில் இருந்தது தெரியும்.

17. 20 வருடங்களுக்கு முன்பாகவே தாவா 2ம்லக்க சொத்தில் பிரதிவாதிகள் 2 தார்சு வீடுகள் கட்டியுள்ள விபரம் தெரிந்தும் உரிய காலத்தில் வழக்கு தாக்கல் செய்யாததால் என் உரிமை நசிந்து விட்டது என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் கட்டியுள்ள 2 தார்சு வீடுகள் மானாமதுரை கூட்டுறவு வீடு கட்டும் சங்கத்தில் கடன் பெற்று கட்டப்பட்டது என்றால் சரிதான். பிரதிவாதிகள் கட்டியுள்ள 2 தார்சு வீட்டிற்கு மின் இணைப்பு உள்ளது என்றால் சரிதான. 24.12.2003ம் தேதி சுப்பிரமணியன் அவரது மகன்களுக்கு பதிவு செய்த இனாம்செட்டில்மெண்ட் எழுதிகொடுத்து அதன் பேரில்தான் கூட்டுறவு வீடு கட்டும் சங்கத்தில் கடன் பெற்று வீடு கட்டப்பட்டது என்றால் இல்லை.

18. பிரதிவாதிகள் கட்டியுள்ள 2 தார்சு வீடுகளுக்கு அருகில் உள்ள தென்னைமரங்கள் சுப்பிரமணியன் வைத்தது என்றால் சரியல்ல. தென்னைமரங்கள் சுப்பிரமணியன் வைத்து என்றால் இல்லை. புளியமரம் சுப்பிரமணியன் வைத்தது என்றால் அது என் அனுபவத்தில் உள்ளது. தென்னைமரங்கள், புளியமரங்கள் சுப்பிரமணியன் வைத்ததை வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 3ம் லக்க சொத்திற்கான கிரைய ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் வீட்டில் வைத்துள்ளேன். 3ம் லக்க சொத்திற்கான கிரைய ஆவணத்தில் இருளப்பன் சேர்வை பூலாவடிதாருக்கும் வடக்கு என்று குறிப்பிட்டிருப்பதுதான் தாவா சொத்து என்றால் தெரியாது.

19. 3ம் லக்க சொத்திற்கான கிரைய ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தால் தாவா சொத்தின் உண்மையான அமைப்பு விபரம் நீதிமன்றத்திற்கு தெரிந்துவிடும் என்பதால் அதை தாக்கல் செய்யாமல் மறைத்து வைத்துள்ளேன் என்றால் சரியல்ல. நீதிமன்ற ஆணையாளர் அறிக்கை மற்றும் வரைபடத்தை படித்து தெரிந்துகொண்டேனா என்றால் தெரிந்துகொண்டேன். ஆணையர் அறிக்கையில் தாவா 2ம் லக்க சொத்தில் உள்ள தென்னை மற்றும் புளிய மரங்களின் வயதை நீதிமன்ற ஆணையர் குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான்.

20. பிரதிவாதிகள் வீடு கட்டி 30 வருடங்கள் இருக்கும் என நீதிமன்ற ஆணையர் அறிக்கையில் குறிப்பிட்டுள்ள விபரத்தை தெரிந்துகொண்டேனா என்றால் தெரிந்துகொண்டேன். நீதிமன்ற ஆணையர் அறிக்கையில் ஆட்சேபணை எதுவும் தெரிவித்துள்ளேனா என்றால் தெரிவித்துள்ளேன். ஆக்கிரமிப்பு உள்ள விபரம் 9.2.2020ம் தேதிதான் தெரியவந்ததாக சீர்திருத்த பிராதில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். வழக்கு காலவாதி தோஷத்திற்கு பாதிக்கப்படக்கூடாது என்பதற்காக 9.2.2020ம் தேதி எனக்கு விபரம் தெரிந்ததாக பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல.

21. 2011ல் 2ம் லக்க சொத்தை நான் கிரையம் வாங்கினேன் என்றால் எனக்கு வருடம் தெரியாது பத்திரத்தை பார்த்தால்தான் சொல்லமுடியும். 2ம் லக்க சொத்தை பிரதிவாதிகளின் தகப்பனார் வெண்ணிலை கிரையம் வாங்கிய விபரம் தெரிந்து கொண்டே கடன் பெற்று வீடு கட்டிய பின்பு வெண்ணிலை கிரையம் என்பதால் நான் மோசடி செய்வதற்காக பதிவு செய்த கிரையம் பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. 2011ல் 2ம் லக்க சொத்தை நான் கிரையம் வாங்கிய போது 2ம் லக்க சொத்தில் வீடு உள்ள விபரத்தை மறைத்துள்ளேன் என்றால் வீடுகளை காண்பித்துள்ளேன்.

22. தாவா வழக்கில் சொல்லியுள்ள விபரங்கள், வழக்கு மூலம் அனைத்துமே தவறாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. உண்மை விபரங்களை மறைத்து பிராது தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கில் கோரியுள்ள பரிகாரங்கள் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Taken down by me in open court
read over/ interpreted to the witness
in Tamil and acknowledged by him,
her to be correct.

District Munsif Cum
Judicial Magistrate,
Thiruppuvanam.